**சுருக்கம்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படும் சத்துணவு – மையங்களின் பயனாளிகளுக்கு 2004–2005–ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ் எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வாங்கி வழங்குவதற்கு ரூபாய் ஒரு கோடி செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட (ச.தி) த் துறை**

அரசாணை நிலை எண். 140

நாள் 07–06–2004

படிக்கப்பட்டது:

அரசாணை நிலை எண்.79, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள் 27–05–2003

---

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களின் பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்கிட 2003–2004–ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு கோடி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2.) தற்போது, 2004–05 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ் சத்துணவுப் பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்குவதற்கு நிதி நிலைக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3) எனவே ஊரக வளர்ச்சி இயக்ககம், நகராட்சி நிர்வாக இயக்ககம் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்–3 ஆகியோரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டு, ஒரு பயனாளிக்கு ஒரு எவர்சில்வர் தட்டு மற்றும் ஒரு எவர்சில்வர் டம்ளர் வீதம் ரூ.30/– செலவினத்தில் 3,33,298 பயனாளிகளுக்கு வாங்கி வழங்குவதற்கு ரூ.100–00 இலட்சத்திற்கு (ரூபாய் நூறு இலட்சங்களுக்கு மட்டும்) அரசு ஒப்பளிப்பு செய்து கீழ்க்கண்டவாறு தொகைகள் பிரித்து வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.

...\d\Copy-D-user10\Nmp-1\5996 go.doc

| வ. எண் | துறைத் தலைவர் | பயனாளி களின் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்ய வேண்டிய தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | ஊராக வளர்ச்சித் துறை இயக்குநர், | 2,92,370 | 87.72 |
| 2 | நகராட்சி நிர்வாக ஆணையர் | 21,533 | 6.46 |
| 3. | திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி நிதி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்-3 | 19,395 | 5.82 |
| | மொத்தம் | 3,33,298 | 100-00 |

(ரூபாய் நூறு இலட்சங்கள் மட்டும்)

4) மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் தமிழ்நாடு திறந்த வெளி
ஒப்புந்தப் புள்ளி சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளி விதிகள் 2000-ன்படி
எவர் சில்வர் தட்டுகள் மற்றும் தம்ளர்களை ஒட்டுமொத்தமாக மூன்று துறைகளுக்கும் சேர்த்து
3,33,298 பயனாளிகளுக்கு வாங்கி வழங்கும் வகையில் ஒரே ஒப்பந்தப்புள்ளியினை ஊரக வளர்ச்சி
இயக்குநர் கோரிப் பெற்று, அந்தந்த துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு எவர் சில்வர்
தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்.
அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்தியது குறித்து பயன்பாட்டுச் சான்றிதழை அரசுக்கு
உடனடியாக அனுப்பிவைக்கும்படி ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5) மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்

"2236-சத்துணவு 02-சத்துணவு டி பானங்கள் வழங்கல். 102-மதிய உணவு பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள். II- மாநிலத் திட்டம். KR-புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட பயனீட்டாளர்களுக்கு எவர்சில்வர் டம்ளர்கள் மற்றும் தட்டுகள் வழங்குதல்.
24-பொருட்களும் வழங்கலும்"
(கு.தொ.கு. 2236-02-102-KR-2400).

6) இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அதன் அ.சா.கு.எண். 35204 Fin(SW)/03, நாள் 16-5-2004-ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.என்.விஜயராகவன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-15

194

உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்–3, சென்னை–113
சமூக நல ஆணையர், சென்னை–5
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
கருவூலம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர் (கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு),
கருவூலம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர், மதுரை
உதவி சம்பள மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–3
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை- 6/9/18/35

நகல்

நிதி (சந)த் துறை, சென்னை–600 009( 2 நகல்கள்)
சமூக நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட(சந–7)த் துறை, சென்னை–9
வரவு–செலவு பொ–1த் துறை, சென்னை–9
புள்ளி விவர வகைப்பாட்டு மையம், சென்னை–25.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

க. டில்லிபாய்
பிரிவு அலுவலர்.

4/8/04

அ.கு.ப

அதன் கருத்தினை இவ்வு கோப்பில் வைக்க அனுப்புகிறேன்.

30/8/04

30/8/04

30/8/04

Copy-D-user10\Wmp-1\5996 go.doc